



அமரர்

# சின்னையா செல்லக்கண்டு

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

## நினைவு மலர்

02.04.2021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



மானிப்பாயைப் பிறப்பிடமாகவும்,
கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட

**அமரர் அண்ணாமலை சின்னையா**

அவர்களுக்கும்,

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும்,
கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட

**அமரர் சின்னையா செல்லக்கண்டு**

ஆகிய

இருவரின் இறைபதம் குறித்த

# நினைவு மலர்

02.04.2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

மானிட வாழ்வில்
வாழ்வாங்கு வாழ்ந்து,
இல்லற வாழ்க்கையை
எமக்குத் தேடித்தந்து
வழிகாட்டிய
எங்கள் குடும்பத் தலைவன், தலைவியின்
பொற்பாதங்களுக்கு
இம் மலரை
அன்புக் காணிக்கையாக
சமர்ப்பணம் செய்கிறோம்.

*ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!*

இங்ஙனம்
குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

மனம் மகிழ

10
04
1936



மனம் நெகிழ

03
03
2021

# அமரர்

# சின்னையா செல்லக்கண்டு

அவர்களின்

## "திதி வெண்பா"

ஆண்டு சார்வரி அமாவாசை முன் சுவாதி
தீண்டும் அபரபட்ச பஞ்சமியில் – நீண்ட
தவவாழ்வு வாழ்ந்த சின்னையா செல்லக்கண்டு
சிவலோகப் பேறடைந்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர்கள்

சின்னையா செல்லக்கண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



## பஞ்சபுராணம்
## தோத்திரப் பாக்கள்
## விநாயகர் துதி

### திருச்சிற்றம்பலம்

முன்னவனே யானை முகத்தவனே முத்திநலம்
சொன்னவனே தூய்மெய்ச் சுகத்தவனே- என்னவனே
சிற்பரனே ஐங்கரனே செஞ்சடையஞ் சேகரனே
தற்பரனே நின்தாள் சரண்.

### தேவாரம்

கருவாகிக் குழம்பிருந்து கலித்து மூளை
கருநரம்பும் வெள்ளெலும்பும் சேர்ந்துஒன்றாகி
உருவாகிப் புறப்பட்டு இங்கு ஒருத்தி தன்னால்
வளர்க்கப்பட்டு உயிராகும் கடை போகாரால்
மருவாகி நின் அடியே மறவேன் அம்மான்
மறித்தொரு கால் பிறப்புண்டேல் மறவா வண்ணம்
திருவாரூர் மணவாளா திருத் தெங்கூராய்
செம்பொனே கம்பனே திகைத்திட்டேனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

உற்றாரை யான் வேண்டேன்,
ஊர் வேண்டேன், பேர் வேண்டேன்,
கற்றாரை யான் வேண்டேன்,
கற்பனவும் இனி அமையும்,
குற்றாலத்து அமர்ந்து உறையும்
கூத்தா, உன் குரை கழற்கே
கற்று ஆவின் மனம்போலக்
கசிந்து உருக வேண்டுவனே!

## திருவிசைப்பா

நீறணி பவளக் குன்றமே ! நின்ற
நெற்றிக்கண் உடையதோர் நெருப்பே !
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா !
ஆறணி சடையெம் அற்புதக் கூத்தா
அம் பொன் செய் அம்பலத்தரசே !
ஏறணி கொடியெம் ஈசனே, உன்னைத்
தொண்டனேன் இசையுமாறு இசையே.

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச்
சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவார் உலகில்
ஊரும் உலகும் கழற உழறி
உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும்
பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

திருவும் கல்வியும் சீரும்
தழைக்கவும் கருணை பூக்கவும்
தீமையைக் காய்க்கவும் பருவமாய்
நமதுள்ளம் பழுக்கவும் பெருகும்
ஆழத்துப் பிள்ளையைப் பேணுவாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

இத்தரணி மீதிற்.........பிறவாதே
எத்தரொடு கூடிக்...........கலவாதே
முத்தமிழை யோதித்......தளராதே
முத்தியடி யேனுக்............கருள்வாயே
தத்துவமெய்ஞ் ஞானக்......குருநாதா
சத்தசொரு பாபுத்.......... தமுதோனே
நித்தியக்ரு தாநற..........பெருவாழ்வே
நிர்த்தஜெக ஜோதிப..........பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க- மன்னன்
கோன் முறை யரசு செய்க குறை விலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்க ளோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலக மெல்லாம்.

## திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் . திரு . திருமதி. சின்னையா செல்லக்கண்டு அவர்களின் வாழ்க்கை வரலாறு

கடல் வளமும், மண் வளமும் கொண்டு அறிவும், ஆற்றலும் உடையோர் சிறந்தோங்கி வாழும் சிறப்புடைய மாநகரமான யாழ் பருத்தித்துறையில் 1936.04.10 அன்று அமரர்களான சின்னத்தம்பி தங்கச்சிப்பிள்ளை தம்பதியினருக்கு மூத்த மகளாகப் பிறந்தவர் தான் அமரர் .செல்லக்கண்டு.

இவருடைய அன்புச் சகோதரர்களான அமரர் சின்னராசா, அமரர் சுப்பிரமணியம், இராசேந்திரம், தங்கவேலு, கனகரத்தினம், ஆனந்தவேல், அமரர் வசந்தராணி, திருமலர்தேவி, தவமலர்தேவி ஆகியோருக்கு மூத்த பிள்ளையாக செல்லமாகவும், குடும்பப் பொறுப்புள்ள பெண்மணியாகவும் வளர்ந்து வந்தார்.

இவர் பருத்தித்துறை கல்லூரி ஒன்றில் கல்வி பயின்றவர். பின்பு திருமண வயதையடைந்ததும் மானிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்ட அமரர்களான அண்ணாமலை, சின்னம்மா இவர்களின் ஒரே மகளாகிய சின்னையா என்பவருடன் 1953ஆம் ஆண்டு இருவரும் திருமண பந்தத்தில் இணைந்து கொண்டனர்.

திருமண பந்தத்தின் பின்பு சிறிய காலம் பருத்தித்துறையில் வசித்த இவர்கள் 1955ஆம் ஆண்டு கிளிநொச்சி நகருக்கு குடியேறினார்கள். கிளிநொச்சியில் ஜெயந்திநகர் எனும் கிராமத்தில் காடு வெட்டி, காணி, கழனி பெற்று சந்தோசமாக வாழ்ந்து வந்தார்கள். இவர்கள் இருவரும் இல்லற வாழ்வில் இனிமையாக வாழ்ந்து வந்ததுடன், கடவுள் பக்தியிலும், தொழில் பக்தியிலும் சிறந்து விளங்கினார்கள்.

அமரர். சின்னையா கிளிநொச்சியில் இருந்த அரிசி ஆலை ஒன்றில் இயந்திரங்கள் பழுது (மெக்கானிக் பார்ப்பவராக) வேலை செய்தார். அவரது தொழில் நேர்த்தியின் பயனாக அயலவர்கள், நண்பர்கள் அவரை "றைவர் சின்னையா" என்று அன்போடு அழைத்தனர். அதே போல் அமரர் செல்லக்கண்டு என்பவரும் வயல்கள், தோட்டங்கள், ஆடு, மாடு வளர்த்தல் என்று அயராது உழைத்து குடும்பத்தை நேர்த்தியாக கொண்டு சென்றார்.

இவர்கள் இருவரின் இல்லற வாழ்வின் நற்பயனாக செல்வசேகரம், குணசேகரம், கமலாம்பிகை, அமரர்.ஞானசேகரம், ஜெகதாம்பிகை, சிவதாம்பிகை, சாந்தா, தயாபரன், மோகனேஸ்வரி, பிரபாவதி ஆகிய பத்து பிள்ளைகளைப் பெற்று சந்தோசமாக வாழ்ந்து வந்தார்கள்.

யுத்த சூழ்நிலை காரணமாக இவர்களின் அன்பு மகன் ஞானசேகரத்தை இழந்திருந்தார்கள். அவரின் இழப்பு இவர்கள் இருவரின் இறுதிக்காலம் வரை அவர்களின் மனதை விட்டு அகலவில்லை.

இவர்களின் பிள்ளைகளும் வளர்ந்து திருமண வயதை அடைந்ததும் பரமேஸ்வரி, கமலநாயகி, தங்கராசா, விஸ்வநாதன், தர்மலிங்கம், சிவஞானராசா, ஜெயவாணி, சாந்தகுமார், லிங்கேஸ்வரன் ஆகியோரை தங்கள் பிள்ளைகளுக்கு திருமணம் செய்து வைத்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் பேறாக பேரப்பிள்ளைகளாகிய ஜெயந்தினி,சுகுமார், புவிஷன், லக்ஷன், லக்ஷனா, விதூஷன், டிலக்ஷன்ராஜ், பிரவின்ராஜ், கர்ஷன்ராஜ், டன்சிகா, றதீஷன், சஜீவன், கோபிஷன், சிம்சன், லீசா, பவித்திரா, பவித்திரன், சோபிதன், மெல்வினா, அபிநயா, அதிசயா, அபித்தா ஆகிய பேரப்பிள்ளைகளையும், விஸ்ணு, சாதுஷன், அபிஷா, ஆதன், ஆகிய பூட்டப்பிள்ளைகளையும் குறைவில்லா பிள்ளைகள், பேரப் பிள்ளைகள்,பூட்டப்பிள்ளைகள் கண்டு நிறைவான வாழ்க்கை வாழ்ந்த வர்கள் என்ற பெருமையை திரு. திருமதி. சின்னையா செல்லக்கண்டு பெற்றிருக்கின்றார்கள்.

நாட்டில் ஏற்பட்ட யுத்த சூழ்நிலை காரணமாக 1996ஆம் ஆண்டு இவர்களுடைய சொந்த வீட்டை விட்டு வேறு இடத்திற்கு செல்ல வேண்டிய நிலையேற்பட்டது. அப்போது அமரர் சின்னையா தனது சொந்த இடத்தை விட்டு வேறு இடம் செல்ல விருப்பமில்லாமல் மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகளை பாதுகாப்பாக வேறு இடத்திற்கு அனுப்பி வைத்து விட்டு தான் மட்டும் கிளிநொச்சி ஜெயந்திநகரில் உள்ள தனது வீட்டில் தங்கியிருந்தார்.

மனைவி, பிள்ளைகள், எவ்வளவோ கெஞ்சிக்கேட்டும் தான் இரத்தமும், வியர்வையும் சிந்தி உருவாக்கிய காணியை விட்டு நான் எங்கும் வரவில்லை என்று கூறிவிட்டார். யுத்தம் கடுமையாக இருந்த அந்தக் காலகட்டத்தில் 27.11.1996ஆம் ஆண்டு அன்று அமரர் சின்னையா அவர்கள் தனது ஆசை போலவே சொந்த வீட்டில் இயற்கையெய்தினார்.

இதன் பின்பு செல்லக்கண்டுவும் பல இடப்பெயர்வுகளைச் சந்தித்து இறுதியில் 2009 சித்திரை மாதம் மிகக்கடுமையான முள்ளிவாய்க்கால் யுத்தம் காரணமாக பிள்ளைகளிடமிருந்து தொடர்புகள் இன்றி தனியாகப் பிரிந்து சென்று விட்டார். இறுதி நேர யுத்தத்தில் தலையிலும், கையிலும் காயப்பட்டு பல மைல் தூரம் எங்கு செல்வதென்று தெரியாமல் நடந்து சென்று இறுதியில் செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவி மூலம் வவுனியா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

அதன் பின்பு வவுனியாவிலுள்ள தனது சகோதரன் கனகரத்தினத்தை தொடர்பு கொண்டு அவருடன் சென்று வசித்து வந்தார்.

யுத்தம் நிறைவடைந்த பின்னர் 2009இல் மீண்டும் தனது சொந்த ஊரான ஜெயந்தி நகரில் மகளாகிய ஜெகதாம்பிகையுடன் வாழ்ந்து வந்தார். இவர் உறவினர்கள், அயலவர்கள் எல்லோரோடும் அன்போடும் பாசத்தோடும் வாழ்ந்து வந்தவர். அவர் "செல்லமணி" என்ற பட்டப்பெயரையும் பெற்றிருந்தார்.

இவ்வாறாக இறுதிக்காலம் வரை எந்த வித குறையுமின்றி பிள்ளைகளின் அரவணைப்பினால் நோய், நொடியின்றி நன்றாக உணவருந்தி வாழ்ந்து வந்தார். குழந்தைப்பருவம், இளமைப்பருவம், முதுமைப்பருவம் மூன்று படிகளிலும் குறைவில்லாமல் வாழ்ந்து பௌர்ணமி நிலவு போல் எல்லோருக்கும் நிறைவான வெளிச்சம் தந்து விட்டு வாழ்கையின் கடைசி எல்லையான 03.03.2021அன்று 85 ஆவது அகவையில் எல்லோரையும் தவிக்க விட்டு தனது சொந்த மண்ணிலே விழி மூடிச் சென்று விட்டார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

***ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*** -குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரங்கற்பாக்கள்

# பிள்ளைகள் புலம்பல்

**பத்துப் பிள்ளைகளைப் பெற்றெடுத்த ஐயா அம்மா**

என் "அம்மா" என்னை நீ பெற்றெடுத்தபோது உன் முகத்தை நான் முதலில் கண்டேன் அம்மா...

நீரோ அதிகாலையில் கண் விழித்தவுடன் உன்நாவில் என் நாமம் உச்சரித்ததும், அந் நேரம் நான் எழுந்து தட்டுத்தடுமாறி சமையலறை சென்று தேநீரும், உம் வாய்க்கு சுவையான உணவையும் செய்துவந்து உம் அருகில் அமர்ந்து, பசி ஆற்றியபின் தான் என் பசி ஆறுவேன் அம்மா...

உம்மை நான் என் குழந்தை என எண்ணி சீராட்டி, அலங்கரித்து, உச்சி முதல் உள்ளங்கால்வரை உம்மை அழகு பார்த்து ரசிப்பேன் அம்மா...

என்னிடம் தானோ உங்களுடைய இறுதி மூச்சைவிட எண்ணினீர்களோ அம்மா...
ஆயிரம் வார்த்தைகள் இருந்தபோதிலும், எதுவும் பேசமுடியாமல் மௌனமாய் வாயடைத்து விட்டீரோ !
அந்நேரம் தான் தெரிந்தது எம்மை விட்டுப் பிரிந்து செல்லப்போகிறீர்கள் என்று...

நானோ துடி துடித்து குமுறினேன் அம்மா...
"ஐயோகடவுளே !!! என் குலவிளக்கு அணைந்து விடப்போகிறது" என்று எண்ணினேன்...

அன்பு, பாசம், நேசம் அனைத்தையும் புரியவைத்தீர்களே !
இறுதியாய் நான் உமக்கு எனது கண்ணீரை
காணிக்கையாய் தருகிறேன் அம்மா...

உங்கள் இருவரின் ஆத்மா சாந்திக்காக இறைவனை வேண்டுகிறேன்...

- மகள்
சிவா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் ஐயா, அம்மாவுக்கு,

என் உருவம் அறியாத காலத்திலிருந்து எதிர்பார்ப்பு
இல்லாமல் பாசம் காட்டிய ஜீவன்களே !

இப்போது என்னருகே எத்தனை உறவுகள் இருந்தாலும்
உங்கள் பாசத்திற்கு ஈடாகுமா ?
திருமண உறவு பந்தங்களிற்காக உங்களிடம் இருந்து பிரிந்து
சென்றோமே.
இளமையில் நீங்கள் உழைக்கும் போது நாம் வறுமையில்
இருந்தோம்,
நாம் கொஞ்சம் வசதி வந்து வாழும் போது,
நீ ஓரிடத்தில் முதுமையாய் அமர்ந்தாயம்மா.

வறுமையில் வாடிவந்த காலத்தில்,
பழங்கஞ்சியுடன் பாச உறவையும்
இரத்தத்தில் கலந்தீர்களே !

இளம் வயதில் நான் உன்னுடன் சந்தை வரும்போது,
என் தலையில் வெய்யில் பிடித்துவிடுமோ என்று எண்ணி,
உன் சேலைத் தலைப்பினால் என் தலையை மூடினாயே அம்மா.
அந் நினைவாக
நீ அணிந்த சேலையை பொக்கிஷமாக
நான் என்றும் காப்பேன் அம்மா.

ஆடு, மாடு, வளர்க்கும் காலத்தில் அவைகள்
மழையில் நனையக் கூடாதென்று, உன் தலையில் துண்டோ,
சுளகோ பிடித்து கொட்டிலில் பாதுகாப்பாய் அம்மா.
ஆனால் நீ நனைகிறாய் என்று பாழப்போன
எங்களுக்கு ஏன் தெரியாமல் போனதம்மா ?

நீங்கள் ஆசையாய் வளர்த்த மஞ்சள் பூனைக்கோ
உங்களின் பிரிவு முதலிலே அறிந்து தான் என்னமோ
தொலைந்து போனதோ அம்மா.

வாய்க்கு வாய் "சாந்தாம்மா, சாந்தாம்மா" என்று கூப்பிட்டு,
எத்தனை பாட்டுபாடினாய்,
எத்தனை கதை சொன்னாயம்மா.
நான் சினக்கும் போது "என் கதையைக் கேளம்மா" என்று
எத்தனை இரகசியங்கள்
சொன்னாய் அம்மா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் உன் பிரிவை ஒரு தரம் சொல்லாமல் போனாயே அம்மா .
உன் நினைவை எங்களிடம் பகிர்ந்து கொள்ள
கடைசி மூச்சை இறுகப் பிடித்து வைத்திருந்தாயே அம்மா.
இங்கிருந்து நான் உங்களிடம் என்ன வேண்டும்.
என்று கேட்டால் அதற்கு நீங்கள் சொல்வ தெல்லாம்
"என்னுடைய குஞ்சுகள் எங்கிருந்தாலும் நோய் நொடி இல்லாமல்,
சண்டை, சச்சரவு இல்லாமல்,
சந்தோசமாக இருக்கோணும்" என்று கையெடுத்து
கும்பிடுவாயேயம்மா.
இந்த வார்த்தை நான் உயிருள்ளவரை என் காதில் ஒலித்துக்
கொண்டிருக்கும் அம்மா.

எங்களின் தலை தடவிய உன் கையால்
கல் மேல் மூவருக்கு இறுதி சின்னத்தை பதித்து
மூச்சை விட்டாயேயம்மா.
உன் பாசத்தால் உற்றார், உறவினர், அயலவர்களை கட்டிப் போட்டு
பூப்போட வைத்தாயேயம்மா.

சொக்கத்தங்கம் போல் மாலை போட்டு
சோடிச்சு வழி அனுப்பி வைத்தபோது, நீ அரவணைத்த உன்
பேரக்குழந்தைகள் உன்னை சுமந்து செல்ல நீ பெருமையுடன்
நித்திரை கொள்கிறாயேயம்மா,
வச்ச கண் வாங்காமல் உன்னை நான் பார்த்தேனம்மா.
நீ அணிந்த சேலையும், நீ எழுதிய கடிதத்தையும், நீ கடைசி
நிமிடத்தில் உன் இறப்பை உணர்ந்து எங்களுக்காக வைத்த
ஆணிவேர்க் கல்லையும் பரம்பரை சொத்தாக பாதுகாப்போமம்மா.

நீ சொல்லிக் கொடுத்த வார்த்தை "யாரிடமும் சண்டை சச்சரவு
இல்லாமல் இருக்க வேண்டும்". என்ற வார்த்தையை நான் வாழும்
வரை முடிந்தவரை முயற்சிக்கிறேன்.
நீங்கள் இருவரும் தொடர்ந்து நன்றாக நித்திரை செய்யுங்கள்.

**- உன் பிரிவில் வாடும் மகள்**
**சாந்தா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்புத் தெய்வமே

அன்பின் உறைவிடமாய்
பாசத்தின் ஒளி விளக்காய்
இப் பூமியிலே அவதரித்த
எம் குடும்ப குல விளக்குகளே...
பத்து மாதம் எனைச் சுமந்து
அல்லும் பகலும் படாத பாடு பட்டு
எனை ஈன்றெடுத்த என் அன்னையே...
தினமும் பாராட்டிச், சீராட்டி
எனை வளர்த்த என் அன்பு செல்வமே...
"தயா....தயா..." என நித்தமும்
என் பெயரை உச்சரித்த என் தெய்வமே...
இனி எப்போது உன் குரலைக் கேட்பேன் தாயே...
அமைதியாகப் போனது ஏனம்மா ??
அழுது புலம்புகின்றேன் அம்மா...
நெஞ்சம் பரிதவிக்க விட்டு சென்றாயே அம்மா...
தாங்கிட மறுக்கிறது தாயே என் இதயம்...

- மகன் தயா

## கோடான கோடி நன்றிகள்

"ஐயா, அம்மா" என்றால் ஆயிரம் அர்த்தங்கள்.
ஆனால் உங்கள் இருவருக்கும் ஆயிரம் அல்ல, கோடான கோடி
என்று தான் சொல்வேன்.
பேனாவை எடுத்துவிட்டேன். கண்களில் இருந்து கண்ணீர் வடிகின்றது,
இருந்தும் உங்களிற்கு என் சிறு சமர்ப்பணம்.

"அன்பு, பாசம், பழக்கம், பண்பாக" இவற்றிற்கு இலக்கணமாய்
வாழ்ந்தவர்கள் எங்கள் அம்மா, அப்பா.
ஆனால் அதை அழகாக சொல்லித் தந்தவர் அம்மா.
பெண் வேலை செய்யும் போது "சித்திரமாக" இருக்க வேண்டும்.
யாரோடும் கதைப்பதென்றால் பண்பாக "அடித்தால் போல் கதைக்க
கூடாது" என்று சொல்வது இன்னும் ஞாபகம் இருக்கின்றது அம்மா.
அது ஒரு புறம் இருக்க நீங்கள் இருவரும் பத்துப் பிள்ளைகள் பெற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்க்கப் பட்டபாடு கொஞ்சமில்லை அம்மா.
"பசி, தூக்கம், உடல் வருத்தம்" பாராமல் எங்களிற்கு சமைத்து மூன்று வேளை பசியையும் போக்குவீர்களே அம்மா. அது மட்டும் தான் தெரியும் அம்மா, வேறு எதுவும் எங்களுக்கு தெரியாது. நாங்கள் வளர்ந்து விபரம் தெரியும் போது உங்கள் கஷ்டம் புரிந்தது.
உங்களைப் பற்றி எதை எழுதுவது என்று தெரியவில்லை.
விடியற்காலை பிள்ளைகள் பள்ளிக்கூடம், வேலைக்குப்போக வேண்டும் என்று மூன்று மணிக்கு சத்தம் போடாமல் சமையல் அறைக்குச் சென்றால், இரவு பத்து மணிவரை நிற்பீர்களே அம்மா.
பின்பு எத்தனை மணிக்கு படுப்பீர்கள் என்றே தெரியாது.
அது மட்டுமா, புதன், சனி, இந்த இரு நாட்களும், சந்தைக்கு போய், இரண்டு தொடக்கம் மூன்று மணிக்கு வருவதைப் பற்றி எழுதுவதா ? .
"பொரியல், தீயல், குழம்பு" இப்படி சமைத்துத் தருவதைப் பற்றி எழுதவா ?. வயிற்றுக்குத்து, வயிற்றுநோவு என்றால் செய்து தரும் சாப்பாட்டைப் பற்றி எழுதுவதா அம்மா ?
இங்கிருந்து நாங்கள் போன்ல கதைத்தால், நீங்கள் முதல் கேட்கும் கேள்வி
"சுதாம்மா வேலையா ? நிற்கின்றீர்களா ?" என்று தான். அப்படி எங்களுடைய கஷ்டத்தை தான் பார்த்தீர்கள் அம்மா. குறிப்பாக "மெல்வினாவை பார்புள்ள, சகோதரம் ஒன்று மில்லை, தனிப்பிள்ளை, தனிச்சுப் போயிற்றாள், புவிசனுக்கும், மெல்வினாக்கும் சகோதரம் இல்லை, அது தான் எனக்கு கவலைபுள்ள. வேறு ஒன்று மில்லை." என்று கூறுவது என் காதில் இப்பவும் ஒலித்துக் கொண்டே இருக்கிறது அம்மா.
அது மட்டு மல்ல "சட்டத்தரணி, நிதிஅமைச்சர்" என்று எனக்கு இரு செல்லப் பெயரும் வைத்து விட்டு போயிருக்கிறீர்களே அம்மா.
இப்படி சொல்லிக் கொண்டே போகலாம் அம்மா.

அம்மா நீங்கள் எங்களோடு இருந்த காலங்களை விட இல்லாத நாட்களை நினைக்க மனம் வருந்துகின்றது. கண் விழித்துப் பார்த்ததும், அம்மா இல்லையே என்ற வேதனையுடன் இவ்வளவு சீக்கிரம் எங்களை ஏங்கவைத்து விட்டு போவீர்கள் என்றும் நாங்கள் நினைக்க வில்லையே அம்மா. ஞானம் அண்ணன், ஐயாவின் நினைவுகளோடு உங்கள் நினைவையும் சேர்த்து விட்டீர்களேஅம்மா. இருந்தும் உங்கள் மூவரின் நினைவுகளுடனும், ஆசியுடனும், எங்களோடு வாழ்ந்து கொண்டிருப்பீர்கள் அம்மா. உங்கள் மூவரின் ஆத்மா சாந்தி அடைய வேண்டிக் கொண்டு மூவருக்குமான சமர்ப்பணத்தை முடிக்கின்றேன்.
**"ஓம் சாந்தி, ஓம் சாந்தி"**

**-அன்பு மகள்**
**சுதா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒருநாள்ராணி

கண்டியில், கட்டுக்கரைப் பிள்ளையார் கோவிலிலே தாலிகட்டி, ஐயாவைக் கரம்பிடித்து, கிளிநொச்சி மண்ணிலே இருவரும் கால் பதித்தீர்கள்.

காடு வெட்டி, வீடுகட்டி, கழனி கண்டு, காட்டு விலங்கிடமிருந்து காப்பாற்றி, படாத கஷ்டம் எல்லாம் பட்டீர்களாம் என்று என் மூத்தவர்கள் சொல்ல கற்பனையில் ஓடு தம்மா.

பத்துப்பிள்ளை பெற்றவள் என்று ஊருக்குள், பால் காய்ச்சுவது என்றாலும், பலகாரச்சட்டி வைப்பது என்றாலும், பவளம் அக்கா வந்து படியில காத்துக்கிடப்பா.

அதுவும் போதாது என்று, செல்லமணி அக்கா பால் காய்ச்சி ஒரே படையல், அவியல், என்று செல்லமாக கடிந்து கொள்வாள் தோழி பவளம் அக்கா.

பள்ளித் தோழிகள் போல் பலர் உங்களுக்கு "பவளம், கமலம், கயிலாசவதி, காமாட்சி, லட்சுமி, தேவி, பகவதி, நீற்றா, நேசம், வேணிஅம்மா, குஞ்சு, பண்டிதர் ஆச்சி" எல்லோரும் கூடி விட்டால் பகிடிக்கு பஞ்சமில்லை.

முள்ளிவாய்க்கால் பிரச்சினையிலும் முதுகு கூனி, மூச்சைப் பிடித்து, யார் துணையுமின்றி, பிணங்களைக் கடந்து, ஆறு மைல் தூரம் வரை தலையில், ஷெல் துண்டுபட்டு, இரத்தம் வடிய, இறுதியில் செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் வவுனியா வந்தீர்கள் என்ற செய்தியை தம்பி கனகரத்தினத்திற்கு எப்படி அறிவித்தீர்களோ ?
இது தான் சகோதரப் பாசமோ ?

பாலு தன்னைப் பார்க்க வாரானாம் என்றால், பாயில் தலை வைக்காமல், கண் விழித்து, "ஜெயாம்மா எனக்கு நகம் வெட்டம்மா, முடிமயிர் எங்கேயம்மா ? சட்டையை மாத்தம்மா, என்ன சமைக்க போறாயம்மா ?" என்று பாடாய்ப் படுத்தியதெல்லாம் இனி கிடைக்காதம்மா.

அழகான ஊன்று கோலுடன் கோவில், ஆஸ்பத்திரி சென்றாலும் எல்லோரும் கேட்பார்களாம் அழகான ஊன்று கோல் என்று அதற்கு "அமுதா அனுப்பினவள்" என்று அறியாதவர்களுக்கும் அழகாய்ச் சொல்வீர்களாமம்மா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வம் அண்ணன் விடும் சேட்டைகள் எல்லோரையும் சிரிக்க வைக்கும். அவருக்கு செல்லமாக நீங்கள் வத்த பெயர் "மூத்தவன் வெருளி " என்று. விடுமுறைக்கு வந்த காலங்கள் எல்லாம், நாம் எங்கு சென்றாலும் குழந்தைப் பிள்ளைபோல் சந்திராக்காவின் அன்புப் பரிசான உருட்டும் வண்டியிலே உருட்டி எல்லா இடமும் உருட்டிக் கொண்டுபோனோம். நயினாதீவு அம்மனையும் காணவேண்டும் என்று குழந்தைப் பிள்ளை போல் வள்ளத்தில் தூக்கி ஏற்றியது என்னை விட்டுப் போகவில்லை அம்மா.

வீணாவின் மகளின் சாமர்த்திய சடங்கிற்கு எல்லோரும் மேடையில் படம் பிடிக்கும் போது "என்னை ஏற்ற மாட்டீர்களா ?" என்று ஏங்கிய முகத்தை, அப்படியே நாவல் சேலையுடன் திலிபனுடன் சேர்ந்து சிலர் வண்டிலுடன் ஏற்றியதும் மேடையே அழகு ஒளிபட்டதம்மா.

பேரப்பிள்ளைகள் உங்களுடன் விடும் சேட்டைகள் பல ஆயிரம். வேலைக்களைப்பில் வந்து பேரப்பிள்ளைகள் கண் உறங்கும் வேளை யெல்லாம் "ஜெயாம்மா, சிவாம்மா, குணாம்மா" என்ற பாடல் நச்சரிப்பாக இருந்தாலும், அது அவர்களை தூங்க வைக்கும் தாலாட்டுப் பாடல் என்று அப்போது ஏன் நமக்குப் புரியவில்லை அம்மா.
என் தலைப்பின் அர்த்தம் இப்போது சொல்கிறேன்.
ஐயா, அம்மா, உங்கள் இருவரின் பாதம் பட்ட இடத்தில் வீடு கட்டி, இருவரின் நாமம் இட்டு ஒரு நாள்ராணி போல் மீனாட்சி அம்மனுக்கு போர்த்திய பட்டுச்சேலையைகட்டி, சொந்தபந்தம் சூழ உங்களை அழகு பார்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டேனம்மா....

இது எல்லாம் நடக்கும் போது நீங்கள் இருக்க மாட்டீர்கள் என்று முன்னமே அறிந்தீர்களோ என்னமோ...
மீனாட்சி அம்மனின் தீர்த்த உற்சவத்தில் அம்மன் அணிந்த சேலையை ஏலம் விட்ட போது, வாங்கி வந்து மறுநாள் காலை வெள்ளிக் கிழமை உங்களுக்கு கட்டினேனம்மா "எங்கபாப்பம்" என்று கேட்க, நானும் உங்கள் தோள் மீது போர்த்தி இரு போட்டோக்கள் தான் எடுத்தேன். இதற்கு தானோ அம்மா ??

இந்த சேலை போதும் அம்மா என்னுடன் கூட இருக்கிறீர்களம்மா. அப்போது எனக்கு ஐந்து வயதிருக்கும். படுக்க பயமாயிருக்கெண்டு பக்கத்து வீட்டுப் பண்டிதர் ஆச்சி ஆள் துணைக்கு வேண்டும் என்று அம்மா என்னைக் கூட்டிக்கொண்டு போய்விட்டுடவா. ஆச்சி எனக்கு கப்பல் வாழைப் பழமும் கள்ளத் தீனியும் களவாகத்தந்திடுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண் பிதுங்க களவாகச் சாப்பிட்டதும்
"ஆச்சியுடன் அழாமல் இருபிள்ளை" என்று விட்டு
அம்மா தலை தடவி விட்டு படலை போய் சேர முன்பு பொடி நடையாய்
புறத்தால போய், அம்மாவின் சேலைத் தலைப்பை பிடித்து நிற்பேன்.

" வாய்க்கிதமாய் என்ன வேண்டும்" என்று
கேட்டதற்கு இங்கிருந்து எல்லா உணவுப் பண்டத்தையும்
அனுப்பும் சந்தர்ப்பம் கிடைத்ததால் என்னமோ...
அதை இறுதி வரை உண்டு களித்ததைக் கண்டோம் ....என்று
எம்மை நாம் ஆறுதல் படுத்துகின்றோமம்மா.
குழந்தைப் பிள்ளை போல், வாரத்திற்கு ஒரு முறை உங்களை
வண்டியிலே வைத்து ஊர் உலாக் கொண்டு செல்ல எவ்வளவோ
முயற்சித்தேன் பலன் கிட்டவில்லை.

காலையில் வேலைக்குச் சென்று,
களவாக தொலைபேசி எடுக்கையில்,
ஐந்து வயதுப்பிள்ளை போல் அடுக்கடுக்காய்
கதைப்பீர்களேயம்மா "அடிக்கடி எல்லாரையும் கூப்பிடாதைங்கோ
அம்மா" என்றால் "இல்ல பிள்ள நான் ஒரு தரம் தான் கூப்பிட்டனான்"
என்று அழகாய் பொய் சொல்லுவீங்களே அம்மா.

போட்ட லைட்டை போடு என்றும், போட்ட பானை நிப்பாட்டு என்றும்,
எல்லோரையும் பித்தர் ஆக்கிப்போன தேனம்மா
அடிவயிறு கலங்க அப்படிக் கத்துவீர்கள்,
பதறி அடித்து விழுந்து ஓடிவந்து என்னம்மா என்று கேட்க
"படுத்திருக்கிறது சரியா?" என்று பதுமையாகக்
கேட்பீர்களாமேயம்மா. அன்றொரு நாள் ஐந்து முறை சூடாக்கிய
குரக்கன்மாப் புட்டை "சூடாயில்லை நான் சாப்பிடமாட்டேன்" என்றதற்கு
"அமுதாவிடம் சொல்லுவன்" என்று சிவா அக்கா சொன்னதற்கு,
"சொல்லு நானுஞ் சொல்லுவன் வெய்யில்ல காயவைச்சுட்டு தாராள்
என்று". இதன் அர்த்தம் சீனியை தேங்காய்ப் பூவை சிறுகத்
தூவவேண்டும் என்று ஜாடையாக சொல்லியிருக்கலாமே அம்மா.

கோடி பேரைக் கொன்றழிக்கும் கொரோனா இல்லை என்றால், ஆடி
மாதம் என்றால் தேடி வந்து உன் காலடியில் கிடந்திருப்போமே அம்மா.

பாலூட்டி, சீராட்டி பார்த்து பார்த்து வளர்த்த உனக்கு பார் விட்டுப்போகும்
போது பால் வார்க்க முடியவில்லையே அம்மா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயா, ஞானம் அண்ணன் இருப்பிடம் நோக்கிச் சென்றீர்களோ ?
இறுதிச் சடங்கினை எல்லோரும் அங்கிருந்து செய்யக்கண்டு
இங்கிருந்த மூவர் நாம்பட்ட துயர் கொஞ்சமில்லை. அபயம் அழிப்பது
போல் எங்களுக்கு உங்கள் கரத்தை மூன்று முறையும் வைக்கும் வரை
மூச்சைப் பிடித்திருந்து மூன்றாம் முறையுடன்
மூச்சு நின்று போனதேனம்மா ??

பத்துப் பிள்ளைகள் இல்லை அம்மா உனக்கு பதினொரு பிள்ளைகள்
என்று தன் கரத்தால் இறுதிக் கடமை
அத்தனையும் தன் நலம் பாராது உனக்களித்தார் சந்திராக்கா.
ஊர் கூடி "அம்மா என்ன சொந்தமா ?"
என்று கேட்டதற்கு "அதற்கும் மேல்"
என்று உங்கள் பெருமைகளை ஒரு வார்த்தையில்
கூறி முடித்தாராம் அம்மா சந்திராக்கா.
பெற்றவர் உங்களுக்கு கடமை செய்ய
பிள்ளைகள் யாருக்கும் கொடுத்து வைக்க வில்லை,

பெற்றவள் உனக்கு கடமை செய்ய எங்கள் மூவருக்கும்
ஏன் இடம் கொடுக்க வில்லை ?
வெள்ளைச் சேலை கட்டி, பஞ்சு வெள்ளை மெத்தை மேல்,
பல வண்ண மாலையிட்டு, பக்கத்தில் நின்று
இறுக ஒரு தரம் கட்டி அணைக்க இறுதியாக ஆசைப்பட்டோம்.

முடியவில்லை இறுதியாக சாந்தாக்கா எழுந்து சென்று
தொலைக்காட்சியில் உன் முகத்தை தன் கரத்தால் வழித்தெடுத்து
கொடுத்த முத்தம் இது தானா இறுதி முத்தம் ???

ஆராரோ... ஆரிவரோ...
ஐயா அம்மா கண்ணுறங்க....

-அன்பு கடைசிமகள்
அமுதாம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருமக்கள் புலம்பல்

மாமி உங்களுக்கு இறுதி நிகழ்வை நாங்கள்
பார்க்கா விட்டாலும், உங்களை நான் நேரில் பார்த்தேன்
என்ற சந்தோஷம் எனக்கு உண்டு.
என்னை "தம்பி" என்று அன் போடு கூப்பிடுவது
மட்டும் எனக்கு நல்ல ஞாபகம் இருக்கிறது மாமி.
உங்கள் ஆத்மா சாந்தி அடைய
இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.
**"ஓம் சாந்தி, ஓம் சாந்தி"**

**-மருமகன்**
**சாந்தகுமார்**

# பேரப்பிள்ளைகள் புலம்பல்

என் அன்பு மிக்க அப்பம்மாவே !
நான் என் அம்மாவின் கைகளில் தவழ்ந்ததை விடவும், உங்கள்
மடிதனில் உழன்றதே அதிகம் !
நாங்கள் ஊரிலிருந்து வந்ததும் வகை வகையாய் சமைப்பீர்களே ! எப்படி
மறப்பது அதனை ?
அப்பம்மா இனி எங்கே காண்பது உங்கள் சிரித்த வதனத்தை !
உடல் சோர்ந்து நடை தளர்ந்து கண் பூஞ்சிய போதும் தினமும்
குளிப்பென்ன, கண்ணாடியில் முகம் பார்க்கும் அழ கென்ன....
எல்லாமும் போய் விட்டது நீங்களும் போய் விட்டீர்கள்.
வருத்தமாக இருக்கிறீர்கள் என்று தானே பார்க்கவந்தேன், ஆனால் என்
கையிலே இறுதியாக பால் குடித்து விட்டு என்னை ஏமாற்றி விட்டு
சென்றதேனோ !
இனி உங்கள் பாசத்தை ஈடு செய்ய யார் உளரோ எமக்கு ?

**-முத்தான மூத்த பேர்த்தி**
**பவா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவரி கொடுத்த அம்மம்மா

எனக்கு முகவரி கொடுத்தது நீங்கள் என்பதால் எழுதுகிறேன், என்
கவிதையின் முதல் வரியாக அம்மம்மா எனும் நாமத்தை !
நானும் பத்து மாதங்கள் சொர்க்கத்தில் இருந்தேன் தாயின்
கருவறையில்....
பல தரப்பட்ட நேரங்களிலும் பதுங்கு குழியில் இருக்கும் தருணங்களிலும்,
இரு கரங்கள் கூப்பி வழிபட்ட எம் காவல் தெய்வம் அம்மம்மா நீங்கள் !

உங்கள் செயல்களை எளிதில் எழுதிவிட முடியாது....
உங்கள் பயித்தம் பலகாரத்தின் பதம் அறிவதற்கு ஏற்ற தகுதி யாரிடமும்
இல்லை அம்மம்மா...
பத்துப் பிள்ளைகள் பெற்று பாசத்தை ஊட்டி வளர்த்தீர்கள்.
அந்த பாசத்தை எனக்கு காட்டியவள் என் தாய் அம்மம்மா....
செல்லமாகக் கூப்பிடுவேன் "செல்லக் கண்டு" என்று,
உங்கள் முகம் காண ஏங்குகின்றேன் நான் இன்று...

எங்கள் வலிக்கெல்லாம் மருந்தாய் வருவீர்கள் நீங்கள் ,
இன்று உம்மைப் பிரிந்த வலிக்கு மருந்து சொல்ல மறந்து விட்டீர்களே ??
நீங்கள் பிறரை வாழ வைத்து பார்த்தவர், ஆனால் இன்று,
உங்கள் பிரிவால் நாம் துடிதுடித்துப் போகின்றோம்.

எங்களைப் பண்புடனும், கௌரவமாகவும், ஒற்றுமை கலையாதும்
நடத்தினீர்களே!
எனி மேல் இப் பாதையை யார் தொடருவார் அம்மம்மா...
என் வரித் துளிகள் உங்களை நனைக்கும் என்று நம்புகிறேன்...

-அன்புப்பேரன்
றதீசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் அம்மம்மா செல்லக்கண்டு

என் அம்மாவைப் பெற்றெடுத்த தாய் நீங்கள்.
எப்போதும் என் இதயத்தில் இருக்கிறீர்கள். என் வாழ்க்கையில்
உங்களை நான்கு முறை பார்த்தேன்.
உங்களைப் பார்த்தவற்றிலிருந்தும், கேட்ட வற்றிலிருந்தும், பெருமைப்
படுகின்றேன். சுதந்திரமான அமைதியான மனதுடன் உங்களைப்
போல இருந்து வாழ விரும்புகின்றேன்.
நீங்கள் இல்லையென்று இப்போ நான் உணர்கின்றேன்.
உங்கள் ஆத்மா பரிசுத்தப்பட வேண்டும்.

**-என்அம்மா செல்லக்கண்டு பேரன் விபிசன்**

## என்அன்பானஅம்மம்மா,

இந்த சிறிய கடிதத்தை நான் உங்களுக்காக எழுதுகின்றேன்.
எல்லோர் இதயங்களிலும் இடம் பிடித்து இருப்பது போல், என் மனதிலும்
நீங்க இடம் பிடித்து நிலைத்து இருக்கிறீர்கள்.
நான் உங்களை நான்கு முறைமட்டுமே பார்த்தேன்.
உங்களின் அணுகு முறைகள் எனக்கு மகிழ்ச்சியாகவே இருந்தன.
எங்களுக்கு நிறைய கதைகளும், சொல்லிப் பாட்டுப் பாடியும்
காட்டினீர்கள். இவையெல்லாம் என் மனதில் பொறிக்கப் பட்ட
என்றென்றும் நினைவு அலைகள்.
நீங்கள் ஒரு தாராளமான, கனிவான, அக்கறையுள்ளஅம்மம்மா.
நான் உங்களின் நகங்களில் வர்ணங்கள் வைத்த போது, குழந்தையைப்
போல் சிரிப்பதை நான் கண்டேன். இவை என்றுமே அழகாக இருக்க
விரும்பினீர்கள். என்னைப் போலவே
உங்களையும் கவனித்துக் கொள்வீர்கள்.

அம்மம்மா நீங்கள் எனக்கு வழங்கிய சிறந்த பரிசுக்கு நன்றி சொல்ல
விரும்புகின்றேன். என் அம்மா சாந்தாவை அழகாகப் பெற்றுத்
தந்ததற்கு நன்றி அம்மம்மா. நீங்கள் முன் மாதிரியாக இருந்தீர்கள்,
என்பதனால் ஒரு தாயின் குணங்களையும் அனைத்துப் பண்புகளையும்
சேர்த்தே அவருக்கு கொடுத்திருந்தீர்கள்.
நான் உங்களை ஒரு போதும் மறக்கமாட்டேன் அம்மம்மா.

**-பேர்த்தி லீசா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்மம்மா

எங்கள் குடும்பத்தின் மூத்த குழந்தை,
அதிகார ராணி, விலை மதிப்பில்லா சொத்து.

அம்மாவை எங்களுக்கு அறிமுகம் ஆக்கியவரே,
அம்மாவின் அன்பையும் சேர்த்துத் தந்தவரே,
தாய் மொழியைச் சொல்ல வைத்தவரே.
நீங்கள் இருவரும், பத்துப் பிள்ளைகளை பெற்ற மகாராசர்கள்,
அம்மப்பா, அம்மம்மா !

நாங்கள் பல ஆயிரம் கிலோ மீட்டர் தொலைவில் வாழ்ந்தாலும்,
உங்கள் காலடியையே சுற்றிச் சுற்றி வந்திருந்தோம்.ஆனால், நீங்கள்
கண் மூடும் போது, நாம் இல்லையே உங்கள் காலடியில்.
வற்றியது கண்ணீர் மட்டுமல்ல, என் இதய நீரும் தான்.

என் கனவுகளிலே வருகிறீர்கள், எழுந்து அணைக்கும் முன்
மறைகிறீர்கள். ஏன் அம்மம்மா மறைகிறீர்கள் ?
வாருங்கள் மீண்டும் இவ் வுலகில்,
வந்து எனக்கு ஆறுதல் தாருங்கள். நாங்கள் இலங்கைக்கு வருவதன்
காரணம், உங்களைப் பார்ப்பதற்கு,ஆனால் இப்போது
எங்களை வரவேற்க நீங்கள் இல்லையே அம்மம்மா.

நான் உங்களுடன் கழித்த சிறந்த நேரங்கள் நிச்சயமாக நாங்கள்
பகிடிச் சண்டை பிடித்த நேரங்கள் தான்.
உங்களுடன் மிகவும் மகிழ்ச்சியுடன் கழித்த தருணங்கள்.
அந்த தருணங்களை நான் ஒரு போதும் மறக்கமாட்டேன்.

ஒரு நாள் சிவா அன்ரா வீட்டு முற்றத்தில், உங்களைச் சுற்றி,
கிட்டத் தட்ட முழு குடும்பமும் இருந்தது.
உங்களுடன் செல்லமாக சண்டை பிடித்து, பகிடி விட்டு, பழைய
கதைகளை கேட்டு, பாட்டுகள் பாடி, அந்த நாள்,
நாங்கள் எல்லோரும் அந்தக் கணத்தை, மகிழ்ச்சியுடன்
கழித்திருந்தோம்.

மறு முறை பிறந்தால், ஒரு முறை ஜெயா அன்ரா வீட்டின் அறையில்,
மீண்டும் உங்கள் அருகில், உங்களைக் கட்டிப் பிடித்து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் தலையை உங்கள் மேல் சாய்க்க வேண்டும். நான் உங்களிடம் : "அம்மம்மா, நோகுதா ?" என்று கேட்பேன் . "இல்லம்மா, நீங்க சாயுங்கோ" என்று பதில் சொல்வீர்கள்.

நீங்கள் என் அம்மா அமுதாவுக்குக் கொடுத்த காணியில், அம்மா விரைவாக வீட்டைக் கட்டி,
நீங்கள் ஒரு ராணியைப் போல அந்த வீட்டில் வசிப்பதை நான் கற்பனை செய்தேன்.
நான் வீட்டின் திட்டத்தை வரைந்த போது, நான் ஏற்கெனவே உங்கள் அறையைத் தேர்ந்தெடுத்திருந்தேன்.

நாங்கள் உங்களை வீடியோவில் படமெடுக்கும் போது "கையைக் காட்டுங்கோ அம்மம்மா" என்று நான் கேட்க, "பாய் பாய்" என்று ஸ்டைலாக ஆங்கிலத்தில் சொல்வீர்கள். அந்த இளமை ஸ்டைலை, நான் எங்கு காணப் போகிறேனோ ?

நாங்கள் விடுமுறையில் வந்த போது, தாயகத்தைச் சுற்றி பஸ்சில் பயணங்களை மேற்கொண்டோம். நீங்கள் எப்போதும் எல்லா இடங்களுக்கும் செல்ல விரும்பினீர்கள்.
நாங்கள் உங்களை பஸ்ஸிலிருந்து இறக்க வில்லை என்றால், ஒரு குழந்தையைப் போல எங்களுடன் வர நீங்கள் பிடிவாதமாக இருந்தீர்கள். இந்த ஆழகான பிடிவாதத்தையும், தைரியத்தையும் இப்போது நான் எங்கு காணப்போகிறேனோ ?

2019ஆம் ஆண்டில், ராசா தாத்தாவின் பேர்த்தியின் சாமத்திய வீட்டுற்கு பஸ்சில் குடும்பமாக பயணத்தை மேற்கொள்ளும் போது, நான் உங்களுடன் சிறிது நேரம் உங்கள் இருக்கைக்கு அடுத்த இருக்கையில் இருந்தேன். நீங்கள் பாலு தாத்தாவின் தொப்பியை அணிந்தீர்கள், என் தோளில் சாய்ந்து படுத்தீர்கள்.

நான் உங்கள் அழகான மென்மையான கையைப் பிடித்தேன். அந்த நேரத்தில் நான் எங்கள் இருவரின் படத்தையும் ஒரு நினைவாக எடுத்தேன். ஐஸ்கிரீம் விற்பனையாளர் வந்தபோது,
நாங்கள் நிறைய ஐஸ்கிரீம் வாங்கினோம். என் கையில் ஐஸ்கிரீம் இருந்தது.
நீங்கள் என்னை அழைத்தீர்கள் "பிள்ளை, இங்கேவாம்மா ! எனக்கு ஒன்று தாங்கோ" என்று ரகசியமாக கேட்டீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த நேரத்தில் றதீசன் அண்ணா வந்து, "கொடுக்க வேண்டாம்" என்று சொன்னவர். நீங்கள் கோபமாக அவரைப் பார்த்தீர்கள்,
ஆனால் நீங்கள் பிடிவாதமாக இருந்தீர்கள், மேலும் என்னிடம் கேட்டீர்கள்.
பின்னர் யாரையும் கேட்காமல், யாருக்கும் பயமின்றி,
நீங்கள் ஐஸ்கிரீமை குடித்தீர்கள்.

நாங்கள் உங்களைப் படம் எடுக்கும் போது, படம் எடுத்து முடிப்பதற்கு முன்பு,
நீங்கள் எங்களிடம் "என்னைக் காட்டுங்கோ பார்ப்போம்" என்று கேட்பீர்கள்.
அதற்கு நாங்கள் பதிலளிப்போம்: "ஓம் அம்மம்மா,
முடிந்த பின் காட்டுறோம்" என்று உங்களை காத்திருக்க வைத்தோம்.

நாங்கள் உங்களுக்கு படங்களைக் காண்பிக்கும் போது:
"நான் வடிவாக இருக்கிறேனா?" என்று, நீங்கள் குழந்தையைப் போல கேட்பீர்கள். தலை முடியைப் பின்னி,
நகங்களில் வர்ணம் பூசி, தங்க நகைகளை அணிந்து,
நீங்கள் ஒரு இளம் பெண்ணைப் போல வடிவாக இருக்க விரும்பினீர்கள்.
எப்போதும் மிகவும் அழகாக இருந்தீர்கள் அம்மம்மா.


உங்களுக்கு மிகவும் பிடித்தபாடல் "ஓரசிக்கும் சீமானே" இந்தப் பாடலை உங்கள் இனிய குரலால் பாடியதை எத்தனை முறை
ஆசையாய் கேட்டிருப்போமம்மம்மா. நான் வீட்டில் இருக்கும் போது,
அடிக்கடி அம்மாவிடம் "ராசாத்தி எப்பிடி இருக்கிறார் ?" என்று நான் கேட்பேன்.
நீங்கள் எப்போதும் ஒரு ராசாத்தி போல வாழ்ந்ததால்,
நான் எப்போதும் உங்களை ராசாத்தி என்று அழைத்தேன்.

உங்களைப் பார்க்க நாங்கள் தாயகத்திற்கு வரும் போது,
உங்கள் மூலமாக முழு குடும்பமும் ஒன்று சேர்ந்தது அம்மம்மா.
எங்கள் சின்னையா குடும்பத்திற்கு அம்மப்பா இல்லாத இடத்திற்கு,
ஆணி வேர் போல் இருந்தீர்கள் அம்மம்மா. இப்போதெல்லாம் எனக்கு,
உங்களின் ஞாபகம் அடிக்கடி வருகிறது அம்மம்மா.

உங்கள் செயல்கள், உங்கள் சிரிப்புகள், உங்கள் கோபங்கள், உங்கள் ராங்கிச் செயல்கள், இன்னும் என் கண்ணுக்குள்ளே இருக்கின்றன.
உங்கள் அழகான ஆன்மா பறந்து விட்டது. சொர்க்கத்தில்
நிம்மதியாக அம்மப்பாவுடன் இருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் இருவரும் என்னைப் பரலோகத்திலிருந்து கவனிக்கிறீர்கள் என்று எனக்குத் தெரியும். உங்களைப் பற்றிய எனது நினைவுகள் விலை மதிப்பற்றவை அம்மம்மா. உங்கள் குடும்பத்தினர் உங்களை ஒரு போதும் மறக்க மாட்டார்கள்.

என் இதயத்தில் என்றும் நீங்கள் குடியிருப்பிர்கள்,

என் வாழ் நாள் முழுவதும் நீங்கள் என் நிழலாக இருப்பிர்கள்.

-உங்கள் பேர்த்தி அபிக்குட்டி

## அம்மம்மா,

என் அம்மாக்கு கிடைத்த வரம்.

காய்ந்த காட்டிற்கும், நிலத்திற்கும் மழை.

இருக்கும் போது சத்தம் ,இல்லாத நேரம் தனிமை.

தேன் இல்லாத தேனீ போல்

சிறகுகள் இல்லாத பறவை போல்

உங்கள் ஆறுதல் இல்லாமல் வாழ்கிறேன்.

சிரிப்பும், கதையும் குழந்தை போல், அதை நினைத்து, நினைத்து வருந்துகிறேன்...

ஒரு நாள் ஒரு தேவதை பூமியில் இறங்கினார், ஆனால் மீண்டும் சொர்க்கத்திற்கு சென்றார், சென்று தாத்தாவையும் சந்தித்தார். மேலே இருந்து திருப்தியோடு பார்க்கிறீர்கள்.

பத்துப் பிள்ளைகள் பெற்று வளர்த்ததாய், எங்கள் குடும்பத்திற்கு நீங்கள் ஓர் ஒளி ! பழங் கதைகள் சொல்லிச் சிரிப்பீர்கள்!

"அம்மம்மா, அம்மப்பா" என்ன அழகான வார்த்தைகள்.

அதை உச்சரிக்க முடியாமல் தவிக்கின்றேன்...

அம்மம்மா... அம்மப்பா...அம்மம்மா...

- பேர்த்தி

அதிசயா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் செந்தளிப்பான அம்மம்மா,

நான் ஒவ்வொரு நாளும் உங்களைப் பற்றி நினைக்கிறேன்.
நாங்கள் எல்லோரும் ஒன்றாகக் கழித்த அற்புதமான
நேரங்கள் அனைத்தையும் நான் நினைவில் வைத்திருக்கிறேன்.

நான் உங்கள் தலை முடியை இழுக்கிறதும், powder போடுறதும்,
நீங்கள் பாடுவதைக் கேட்கிறதும்,
உங்கள் வாழ்க்கையைப் பற்றி என்னிடம் சொல்லுவதும்...
எல்லாம் நினைவில் இருக்கின்றன.

உங்களில் எனக்கு மிகவும் விருப்பமானது உங்கள் கண்கள்.
அவை மென்மையாகவும் அழகாகவும் இருந்தன.
நான் இவற்றை எல்லாம் மணிக்கணக்கில் ரசிக்க முடிந்தது.
உங்களுடன் கதைக்கும்பொழுது,
ஒரு குழந்தையுடன் கதைப்பது போல் உணர்ந்தேன்.

நான் உங்களை இழந்து தவிக்கிறேன். ஆனால் மேல் இருந்து,
நீங்கள் நம் அனைவரையும் கவனிக்கிறீர்கள் என்று எனக்குத் தெரியும்.
என் மனதில் எத்தனை துக்கங்கள் இருந்த போதிலும்,
என் இதயத்தில் உங்களுக்கு எப்போதும் மிக முக்கியமான இடம்
இருக்கும். நீங்கள் எப்போதும் என் சூரிய ஒளியாக இருப்பீர்கள்.

**- உங்கள் செல்லப் பேர்த்தி**
**அபித்தா**

## அம்மம்மா

"அம்மம்மா" என்று இனி நாங்கள் யாரைக் கூப்பிடுவது அம்மம்மா.
நாங்கள் அங்கு வரும் போது நீங்கள் இல்லையே அம்மம்மா. எனக்கு
அப்போது ஒன்றும் புரிய வில்லை. ஆனால்
இப்போது தான் உங்கள் பாசம் என்னவென்று புரிகிறது அம்மம்மா.

நான் போனில் கதைக்கும் போது "மெல்வினாக் குட்டி" என்று தானே
கதைப்பீர்கள் அம்மம்மா. அது மட்டும் இல்லை நீங்கள் அம்மாவுக்கு
சொல்வீர்களாம் , "பிள்ளைக்கு அடிக்காத, பேசாத, புள்ள பாவம்,
கவனமாகப் பார்புள்ள" என்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது மட்டுமா நான் அங்குவரும் போது, நான் சில உடுப்புகளை விட்டு வருவன். பின்பு நீங்கள் அதனை எடுத்து வைத்துக் கொண்டு "என்ர மெல் வினாக் குட்டியின்ர, குஞ்சின்ர" என்று கொஞ்சுவீர்களாம் என்றும், தலையணைக்குக் கீழ் வைத்தும் படுப்பீர்களாம் என்று ஜெயாஅன்ராவும், பிரவின் அண்ணாவும் எனக்கு சொல்வார்கள்.
எனக்கு இதை நினைக்கும் போது அம்மம்மா அழுகை வருகின்றது.

இனி மேல் நாங்கள் அங்கு வரும் போது நீங்கள் இல்லையே என்ற ஏக்கம் தான் அம்மம்மா எங்கள் மனதில் ஓடிக் கொண்டிருக்கின்றது.

**- பேர்த்தி**
**மெல்வினா**

## பூட்டப் பிள்ளைகள் புலம்பல்

**எம் அருமைப் பாட்டியே!**

எங்களைக் கண்டவுடன் கட்டி அணைத்து முத்தம் தருவீர்களே... இப்போது உங்களைக் காணவந்தோம், ஆனால் நீங்கள் இங்கு இல்லையே. எங்களை எல்லாம் தவிக்க விட்டு எங்கு சென்றீர்கள் ? நாங்கள் எப்ப வந்தாலும், பருத்தித்துறைக்கு வரவேண்டும் என்று ஆசைப்படுவீர்களே, ஆனால் கடைசி வரை வராமலே கண்ணை மூடி விட்டீர்களே. பாட்டி இனி உங்களை எப்போ காணப் போகிறோம்....?

**- பூட்டப்பிள்ளைகள்**
**விஷ்ணு, சாது, அபிசா**

## பெறாமக்கள் புலம்பல்

**அன்னை என்றதோர் விருட்சமாம்**

அன்னை என்றதோர் விருட்சமாம்,
அதற்கு கிளைகள் ஏராளமாம்,
அன்பு என்ற அந்த விருட்சமாம்,
அமருவதற்கோ பல பறவைகளுக்கு
இடம் நல்கியதாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடன் தன் கிளைகளை, அரவணைத்த விருட்சமாம்,
அயலவர்களையும் அணைக்கத் தவற வில்லையாம்,
அனைவரையும் ஆதரித்த விருட்சத்திடம்
அடியேனும் ஆதரவைப் பெற்றேனாம்.

அருமையான அந்தக் கிளைகளில் சில வற்றையாம்,
அனுப்பிவைத்த தாம் வெளிநாடு அந்த விருட்சமாம்,
அவர்களின் சிறப்புகளை கண்டுகளித்த அந்த விருட்சமாம்,
அனைத்தும் இங்கிருந்த கிளைகளாம்,
அன்பை வாரி வழங்கி விருட்சத்தை பாதுகாத்தனவாம்.

அவ் விருட்சத்தின் முடிவு காலம் வந்ததுவாம்,
அருளோடும் அரவணைப் போடும் வாழ்ந்த அந்த விருட்சமாம்,
அமைதியாக இறைவன் பாதம் சேர்ந்ததாம்,
அன்பு நெஞ்சங்கள் துடி துடித்தனவாம்,
அடியேனும் அந்த "அம்மா" என்ற விருட்சத்தின்
அமைதிக்காக வேண்டுகிறேனாம்.

குடும்ப உறவினர் அனைவருக்கும் எனது
இதய அனுதாபங்கள்.

– பெறாமகள்
சந்திராசி சிவசுப்பிரமணியம்

**உற்றார் உறவினர் புலம்பல்**

(.................................)

**சகோதரர்கள் புலம்பல்**

(.................................)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிடித்த பாடல்
## ஓரசிக்கும் சீமானே

ஓஹோஓஓஓஓஓஓஓஓஓஓஓஓஓஓ
ஓஹோஹோ ஓஹோஹோ ஓஹோஹோ
ஓஹோஹோ ஓஹோஹோ

ஓரசிக்கும் சீமானே

ஓரசிக்கும் சீமானே வா
ஜொலிக்கும் உடையணிந்து
களிக்கும் நடனம் புரிவோம்
அதை நினைக்கும் பொழுதுமனம்
இனிக்கும் விதத்தில் சுகம்
அளிக்கும் கலைகள் அறிவோம்

ஓரசிக்கும் சீமானே

ஓரசிக்கும் சீமானே வா
வா ஜொலிக்கும் உடை யணிந்து
களிக்கும் நடனம் புரிவோம்
அதை நினைக்கும் பொழுது மனம்
இனிக்கும் விதத்தில் சுகம்
அளிக்கும் கலைகள் அறிவோம்

கற் சிலையும் சித்திரமும் கண்டு
அதன் கட்டழகிலே மயக்கம் கொண்டு
கற் சிலையும் சித்திரமும் கண்டு
அதன் கட்டழகிலே மயக்கம் கொண்டு
கற்சிலையின் கட்டழகிலே மயக்கம் கொண்டு
வீண் கற்பனை யெல்லாம் மனதில் அற்புதம் என்றே
மகிழ்ந்து விற்பனை செய்யா தேமதியை
வீண் கற்பனை யெல்லாம்
மனதில் அற்புதம் என்றே
மகிழ்ந்து விற்பனை செய்யாதே மதியை
தினம் நினைக்கும் பொழுது
மனம் இனிக்கும் விதத்தில்
சுகம் அளிக்கும் கலைகள் அறிவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓரசிக்கும் சீமானே

ஓரசிக்கும் சீமானே
வா ஜொலிக்கும் உடை யணிந்து
களிக்கும் நடனம் புரிவோம்
அதை நினைக்கும் பொழுது
மனம் இனிக்கும் விதத்தில்
சுகம் அளிக்கும் கலைகள் அறிவோம்

வானுலகம் போற்று வதை நாடி
இன்ப வாழ்கையை இழந்தவர்கள் கோடி
வானுலகம் போற்றுவதை நாடி
இன்ப வாழ்கையை இழந்தவர்கள் கோடி
பெண்கள் இன்ப வாழ்க்கையை இழந்தவர்கள் கோடி
வெறும் ஆணவத்தினாலே பெரும்
ஞானியைப் போலே நினைத்து
வீணிலே அலைய வேண்டாம்
வெறும் ஆணவத்தினாலே பெரும்
ஞானியைப் போலே நினைத்து
வீணிலே அலைய வேண்டாம்
தினம் நினைக்கும் பொழுது
மனம் இனிக்கும் விதத்தில்
சுகம் அளிக்கும் கலைகள் அறிவோம்

ஓரசிக்கும் சீமானே

ஓரசிக்கும் சீமானே வா
ஜொலிக்கும் உடை யணிந்து
களிக்கும் நடனம் புரிவோம்
அதை நினைக்கும் பொழுது மனம்
இனிக்கும் விதத்தில் சுகம்
அளிக்கும் கலைகள் அறிவோம்

ஓஹோ ஓஓஓஓஓஓஓஓஓஓஓஓ....
ஓ ஹோஹோ ஓஹோஹோ ஓஹோஹோ
ஓ ஹோஹோ ஓஹோஹோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொன் மொழிகள்

01) அறிவுள்ள மனிதர்களுடன் உரையாடு
அறிவில்லாத மனிதர்களோடு உறவாடு
ஆனால் பண்பில்லாதவனைக் கண்டால் ஒதுங்கிடு.

02) ஒரு வினாடியில் நாம் செய்யும் தவறு
வாழ்க்கை முழுவதும் வேதனையைத் தேடித் தருகின்றது

03) அயலவனை நேசி அதற்காக அவனையும், உன்னையும் பிரித்து
வைக்கும் வேலியைப் பிடுங்கி விடாதே

04) ஒருவன் இறந்த பின் அவனுக்கு அன்னமாய், அமுதாய்
படைப்பதை விட அவன் இருக்கும் போது அவனை நன்றாய்
பராமரிப்பதுதான் சிறந்த கடமை

05) துன்பங்களை உன்னிடத்தில் குடி வைக்காதே
அது உன்னை இறுதியாய் அழித்துவிடும்.

06) யாரேனும் குறை கூறினால் அது உண்மையாக இருந்தால்
உன்னை நீ திருத்திக் கொள். பொய்யாக இருந்தால் சிரித்துப்
பொருட்படுத்தாமல் விட்டு விடு.

07) ஆயிரம் வீண் வார்த்தைகளை விட கேட்பவர்களுக்கு
இதமளிக்கும் ஒரு நல்ல வார்த்தை மேலானது

08) உட்பகையை விட வெளிப்படையாகக் கடிந்து கொள்வது நல்லது

09) தமக்கு நல்லது என்று கருதாததை பிறருக்குச் செய்யாமல
இருப்பவரே சான்றோர் ஆவார்.

10) மற்றவர்களைக் கீழே தள்ளிவிட்டு நீ மட்டும் ஏணியில் ஏற
முயற்சிக்காதே.

11) உனது எதிரியை அச்சுறுத்தும் வலுவான ஆயுதங்கள் உன்
மௌனமும் பொறுமையும் தான்.

12) பிறருக்கு நன்மை செய்யப் பிறந்த நீ
நன்மை செய்யாவிட்டாலும் தீமையாவது செய்யாதிரு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகவத் கீதை சொல்லும் வாழ்க்கை

| | |
|---|---|
| வாழ்க்கை ஒரு சவால் | அதனை செய்யுங்கள் |
| வாழ்க்கை ஒரு பரிசு | அதனை ஏற்றுக் கொள்ளுங்கள் |
| வாழ்க்கை ஒரு சாகசப்பயணம் | அதனை மேற்கொள்ளுங்கள் |
| வாழ்க்கை ஒரு சோகம் | அதனை கடந்து வாருங்கள் |
| வாழ்க்கை ஒரு துயரம் | அதனை தாங்கிக்கொள்ளுங்கள் |
| வாழ்க்கை ஒரு கடமை | அதனை ஏற்றுக்கொள்ளுங்கள் |
| வாழ்க்கை ஒரு விளையாட்டு | அதனை விளையாடுங்கள் |
| வாழ்க்கை ஒரு விநோதம் | அதனை கண்டறியுங்கள் |
| வாழ்க்கை ஒரு பாடல் | அதனை பாடுங்கள் |
| வாழ்க்கை ஒரு சந்தர்ப்பம் | அதனை பயன்படுத்திக் கொள்ளுங்கள் |
| வாழ்க்கை ஒரு பயணம் | அதனை முடித்து விடுங்கள் |
| வாழ்க்கை ஒரு உறுதிமொழி | அதனை நிறைவேற்றுங்கள் |
| வாழ்க்கை ஒரு காதல் | அதனை அனுபவியுங்கள் |
| வாழ்க்கை ஒரு அழகு | அதனை ஆராதியுங்கள் |
| வாழ்க்கை ஒரு உணர்வு | அதனை உணர்ந்து கொள்ளுங்கள் |
| வாழ்க்கை ஒரு போராட்டம் | அதனை எதிர்கொள்ளுங்கள் |
| வாழ்க்கை ஒரு குழப்பம் | அதனை விடை காணுங்கள் |
| வாழ்க்கை ஒரு இலக்கு | அதனை எட்டிப்பிடியுங்கள் |

❖ எவன் ஒருவனுக்குத் தன்னிடத்தில் நம்பிக்கை இல்லையோ அவனே நாத்திகன்

❖ ஆன்மாவால் சாதிக்க இயலாத காரியம் என்று எதுவும் இருப்பதாக ஒருபோதும் நினையாதே

❖ நீ எதை நினைக்கிறாயோ அதுவாகவே ஆகிறாய். நீ உன்னை வலிமையுடைவன் என்று நினைத்தால் வலிமை படைத்தவனாகவே ஆகிவிடுகிறாய்.

❖ சுதந்திரமானவனாக இரு. எவரிடத்தும் எதையும் எதிர்பார்க்காதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருட்சம்




★ அமரர்களைக் குறிக்கும்


## தேற்றம்

இறக்க வெனப் பிறந்தோம் பிறக்க வென இறக்காது.
கறையற்ற வாழ் வமர்த்தி கற்றவற்றை நெறிப் படுத்தி.
குறை வில்லா வாழ் வெய்ய குற்ற மேதும் புரியாது.
இறைவன் புகழ் பாடி இயன்ற வரை அறஞ் செய்வோம் !

## நன்றி நவிலல்

எங்கள் தெய்வத் தலைவியின் மரணச் செய்தி கேட்டு,
உடன் வந்து உதவியவர்களுக்கும்,
இறுதிக் கிரியைகளில் கலந்துக்கொண்டோருக்கும்,
தொலைபேசி மூலம் ஆறுதலளித்தவருக்கும்,
மற்றும், அந்தியேட்டி ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகளில்
பங்கு பற்றிய அனைவருக்கும்,
எங்கள் குடும்ப சார்பில் மனம் நிறைந்த
நன்றிகளை சிரம் தாழ்த்தி தெரிவித்துக் கொள்கிறோம்.


- இங்ஙனம்
குடும்பத்தினர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## கீதாசாரம்

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது
எது நடக்கின்றதோ அது நன்றாகவே நடக்கின்றது
எது நடக்க இருக்கின்றதோ அதுவும்
நன்றாக நடக்கும்
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக அழுகின்றாய்?
எதை நீ கொண்டு வந்தாய்
அதை நீ இழப்பதற்கு
எதை நீ எடுத்துக்கொண்டாயோ
அது இங்கேயே கொடுக்கப்பட்டுள்ளது
எது இன்று உன்னுடையதோ அது
நாளை மற்றொருவருடையதாகின்றது
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்
இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.

– பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் –

வேழன் பதிப்பகம், கிளிநொச்சி .021 228 5579

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org